TNPSC JOB

T

Reg. No.: | | | | | | |

# இரண்டாம் பருவப் பொதுத் தொகுத்தறித் தேர்வு–2025

## வகுப்பு – 7

காலம் : 2.00 மணி — தமிழ் — மதிப்பெண்கள்:60

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 4 x 1 = 4

1. கல்வியைப் போல் .......... செல்வம் வேறில்லை.
   அ) விதையில்லாத ஆ) கேடில்லாத இ) உயர்வில்லாத ஈ) தவறில்லாத
2. முற்காலத்தில் இந்தியமக்கள் துன்பப்பட்டதற்குக் காரணம் ........ இல்லாமை.
   அ) விளையாட்டு ஆ) கல்வி இ) கலைகள் ஈ) முயற்சி
3. போர் இல்லாத உலகில் ........ நிலவும்.
   அ) பதற்றம் ஆ) சாந்தம் இ) சோர்வு ஈ) வெறுப்பு
4. நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம் ........
   அ) குகை ஓவியம் ஆ) சுவர் ஓவியம் இ) கண்ணாடி ஓவியம் ஈ) கேலிச்சித்திரம்

ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக. 2 x 1 = 2

5. கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் ..........
6. கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது ..........

இ) பொருத்துக. 4 x 1 = 4

7. இயற்சொல் – பெற்றம்
8. திரிசொல் – இரத்தம்
9. திசைச்சொல் – அழுவம்
10. வடசொல் – சோறு

ஈ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளிக்க. 5 x 2 = 10

11. வளர்தல் என்பது எவ்வகைப் பெயர்? விளக்கம் தருக.
12. சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்களைக் கூறுக.
13. மலர்கள் எப்போது தரையில் நழுவும்?
14. இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
15. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
16. இந்திய நாடு எவற்றில் சிறந்து விளங்கியது?
17. கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.

உ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடையளிக்க. 3x4=12

18. மக்கள் விலங்குகளைப் போல வாழக் காரணம் என்ன?
19. கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.
20. கேலிச்சித்திரம் என்றால் என்ன?
21. கல்வியையும் விளக்கையும் திருக்குறளார் எவ்வாறு ஒப்பிடுகிறார்?
22. ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.

ஊ) அடிபிறழாமல் எழுதுக. 2 + 4 = 6

23. 'எண்ணணி' எனத் தொடங்கும் திருக்குறள்.
24. வைப்புழிக் கோட்படா.... அல்ல பிற (அழியாச் செல்வம்)

Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB



எ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 10 x 1 = 10

25. பிரித்து எழுதுக.
   அ) செப்பேடு ஆ) கோட்டோவியம்
26. சேர்த்து எழுதுக.
   அ) எழுத்து+ஆணி ஆ) நிற்பது+அறிந்தும்
27. கலைச்சொல் தருக.
   அ) cartoon ஆ) Aesthetics
28. இடைச்சொல் 'கு' சேர்த்துத் தொடரை எழுதுக.
   அ) மாடு புல் கொடுத்தாள் ஆ) சுவர் சாந்து பூசினாள்
29. இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக.
   ஆறு
30. பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக.
   அ) தீ ........... ஆ) தை .........
31. ஓரெழுத்துச் சொற்களால் நிரப்புக.
   அ) ......... பறக்கும் ஆ) ........ சுடும்
32. 'ஆல்' என்னும் உருபைச் சேர்த்து எழுதுக.
   அ) கல்லணை கரிகாலன் கட்டப்பட்டது
   அ) அவர் களிமண் பானை வனைந்தார்
33. சொற்றொடரில் அமைத்து எழுதுக.
   அ) செல்வம் ஆ) தேர்ந்தெடுத்து
34. 'மா' என்னும் எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கொண்டு விடையெழுதுக.
   அ) முக்கனிகளுள் ஒன்று ..........
   ஆ) அளவில் பெரிய நகரம் .........

ஏ) ஏதேனும் ஒன்றுக்கு விடையளி. 1 x 6 = 6

35. உங்கள் மாவட்டத்திலுள்ள சுற்றுலா இடங்களின் சிறப்புகளை எழுதுக.
36. கூலித்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர நீங்கள் கூறும் வழிமுறைகள் யாவை?

ஐ) ஏதேனும் ஒன்றுக்கு விடையளி. 1 x 6 = 6

37. கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி 'எங்கள் ஊர்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக (முன்னுரை – அமைவிடம் – பெயர்க்காரணம் – தொழில்கள் – சிறப்பு மிகு இடங்கள் – திருவிழாக்கள் – மக்கள் ஒற்றுமை – முடிவுரை)
38. உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி பொது நூலக இயக்குநருக்கு கடிதம் எழுதுக.

---

Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com